2nd August 1966]

திருச்செந்தூரிலிருந்து அரசாங்க பஸ்கள் விடுதல்

*37 கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்செந்தூரிலிருந்து, ராஜ்யத்தின் பல பகுதிகளுக்கும் சர்க்கார் பஸ் விட அத்தொகுதி சட்டசபை மெம்பர் கடந்த சில ஆண்டுகளாகக் கோரி வருகிறாரா ?

(இ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) & (இ) கனம் அங்கத்தினர்களிடமிருந்து அநேக யோசனைகள் வருகின்றன. அவை பரிசீலிக்கப்பட்டு முடிவுகள் அவர்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், திருச்செந்தூர் வழியாக எக்ஸ்பிரஸ் பஸ் செல்லுவதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறதா ? எந்த எந்தப் பக்கத்திலிருந்து எங்கே, எங்கே பஸ் விடப் போகிறார்கள் என்கிற தகவல் தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI V. RAMAIAH : Sir, the hon. Member has been informed that it is not possible for the Department to operate the Express Bus services from Tiruchendur, as terminus, since depot facilities are not available at Tiruchendur. He has also been informed that there is a proposal to open a route from Nagercoil to Palani and when this materialises, Tiruchendur, Tuticorin and Palani will be connected by the route . But this route has been dropped from the programme for 1966–67. However, there is another route in the programme, viz., Nagercoil to Ramanathapuram (via) Tiruchendur. This route, when opened, will provide transport facilities of State Transport Department to Tiruchendur and connect it with other places.

திரு. எம். எஸ். செல்வராஜன் : நாகர்கோயிலில் இருந்து திருச்செந்தூர் வழியாகப் போகும் அந்த பஸ் எப்பொழுது விடுவதாக அரசாங்கத்திற்கு உத்தேசம் ?

கனம் திரு. வெ. ராமையா : ' Under consideration ' என்று சொன்னேன். ' டெபனெட்டாக ' ஆகவில்லை.

Enforcement of Prevention of Adulteration of Food Act

*38 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether the Government have proposed to constitute any Advisory Committee at State level to go into the day-to-day problems and difficulties of the business community in the operation of the Prevention of Adulteration of Food Act and Rules and make appropriate suggestions to the Government?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஆம்.